Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 28 2024

வியாழக்கிழமை 28, நவம்பர் 2024 | ஒளி: 10 கதிர் 103 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

### இயற்கையின் சீற்றத்தில் சிக்கி

# நால்வர் பலி; அறுவர் மாயம்

## இரண்டு இலட்சத்து 30,743 பேர் நிர்க்கதி

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழையால், ஒன்பது மாகாணங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தற்போது நிலவும் இந்த மோசமான காலநிலை, இன்னும் சில நாட்களுக்கு நீடிக்குமென வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த தாழமுக்கத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தீவை தற்போது பாதித்துள்ள கடுமையான காலநிலை



காரணமாக இதுவரை நான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஆறு பேர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத் (ஓய்வு) தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2





# ஒருவரை மீட்டது விமானப்படை

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானப்படை தொடர்ந்து கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, விமானப்படையின் இல 07ம் படைப்பிரிவை சேர்ந்த பெல் 212 ஹெலிகொப்டர் அம்பாறை பகுதிக்கு கண்காணிப்புக்காக புதன்கிழமை (27) அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளின் போது ஏறாவூர் மைலவட்டவான் பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கியிருந்த ஒருவர் ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டு, பின்னர் மட்டக்களப்பு விமானப்படை தளத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார்.



# மத்ரஸா மாணவர்கள் இருவரின் ஜனாஸாக்கள் மீட்பு



வி.ரி.சகாதேவராஜா, நூருல் ஹுதா உமர்

காரைதீவு - மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போகியிருந்தனர்.

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு மற்றும் பாதுகாப்பு படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது வெள்ளத்தில் இருந்து 5 மாணவர்கள், செவ்வாய்க்கிழமை (26) மாலை காப்பாற்றப்பட்டனர்.

இருள் இரவு சூழ்ந்திருந்த போதிலும் சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி அமைப்பு, மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு, காரைதீவு சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் தேடுதல் நடவடிக்கை புதன்கிழமை (27)

தொடர்ச்சி P2



# “களத்துக்கு செல்லுங்கள்”

தொழில்நுட்ப தகவல்களை மாத்திரம் அடிப்படையாக கொண்டுச் செயற்படமால் அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்துள்ள பிரதேசங்களுக்குச் சென்று தகவல்களை பெற்றுக்கொண்டு, மக்களுக்கு அவசியமான நிவாரணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தார்.

தொடர்ச்சி P2

# பல பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை



தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக மூன்று மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் டி.ஐ.ஜி நிஹால் தல்துவ புதன்கிழமை (27) தெரிவித்தார்.

மேலும், சிவப்பு அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அப்பகுதி மக்கள் உடனடியாக அந்த இடங்களை விட்டு வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# ஏ-9 வீதி முடங்கியது

க.அகரன் சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா ஏ-9 வீதி போக்குவரத்து தற்போது தடைப்பட்டுள்ளது. வவுனியா, நொச்சிமோட்டை மற்றும் சாந்தசோலை ஆகிய பகுதிகளில் ஏ-9 பிரதான வீதியின் ஊடாக அதிகளவான வெள்ள நீர் வழிந்தோடுவதனால் கனரக வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் வீதியோரம் நிற்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

# மாவீரர் நாள் நினைவேந்தல்



நிதர்ஷன் வினோத்

மாவீரர் நாள் நினைவேந்தல் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் புதன்கிழமை (27) நடைபெற்றது. வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் பொதுசுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2




# பாலர், முஸ்லிம் பாடசாலைகளுக்கு பூட்டு

எஸ்.கீதபொன்கலன்

வடமத்திய மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட 1,480 பாலர் பாடசாலைகளை புதன்கிழமை (27) முதல் மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக மாகாண ஆரம்பக் குழந்தைப் பருவ அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் நிலந்த ஏகநாயக்க தெரிவித்தார்.

வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாசவின் பணிப்புரைக்கு அமைய வடமத்திய மாகாணத்தில் உள்ள 94 முஸ்லிம் மற்றும் தமிழ் பாடசாலைகள் இம்மாதம் 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை மூடப்படும் என மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்துள்ளார். மோசமான வானிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# கிழக்கு பல்கலைக்கழக விடுதிகள் மூடப்பட்டன

பேரின்பராஜா சபேஷ்

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்குப் பல்கலைக் கழகத்தின் விடுதிகள் புதன்கிழமை (27) முதல் அமுலுக்கு வரும் வகையில் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டு மாணவர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பட்டுள்ளது என கிழக்குப் பல்கலைக் கழக பதிவாளர் அமரசிங்கம் பகிரதன் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

# எம்.பியின் வாகனம் தடாகத்துக்குள் பாய்ந்தது

தேசிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நிஹால் அபேசிங்கவின் கார் பாராளுமன்ற வளாகத்தில் உள்ள நீர் தடாகத்துக்குள் செவ்வாய்க்கிழமை (26) மாலை விழுந்து விபத்துக்குள்ளானது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நால்வர் பலி; அறுவர் மாயம்

பணிப்பாளர் நாயகத்தின் கூற்றுப்படி, சீரற்ற காலநிலையால் 18 மாவட்டங்களில் உள்ள 141 பிரதேச செயலாளர் பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 66,947 குடும்பங்களைச் சேர்ந்த 230,743 பேர் தற்போதைய நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். எட்டு வீடுகள் முழுமையாகவும் 620 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக மேஜர் ஜெனரல் உதய ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும், 15,586 பேர் 165 பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வடக்கு, வடமத்திய, மத்திய, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் கேகாலை மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இந்நிலையில்,

புதன்கிழமை (27) காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் யாழில் 253 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அச்சுவேலி பிரதேசத்தில் 245.3 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சியும் முல்லைத்தீவு - துணுக்காயில் 50.5 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சியும் பதிவானது.



## மத்ரஸா மாணவர்கள் இருவரின் ஜனாஸாக்கள் மீட்பு

காலையும் தொடர்ந்தும் இடம்பெற்று வந்தது.

அதன்போது இரண்டு ஜனாஸாக்கள் மீட்புப்பணியாளர்களினால் மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் நிந்தவூர் காஷிபுல் உலூம் அறபுக் கல்லூரி மாணவர் பாரூக் முஹம்மட் நாஸிக் (15வயது) என்ற மாணவரும், இன்னுமொரு அடையாளம் தெரியாத ஒருவரின் ஜனாஸாவும் மீட்கப்பட்டது. வெள்ளத்தில் காணாமல் போனவர்களை தொடர்ந்தும் தேடும் நடவடிக்கை மீட்புப்பணியாளர்களினால் முன்னெடுக்கப்படுகின்றது.

மத்ரஸா முடிந்து மாணவர்களும் உழவு இயந்திர சாரதி மற்றும் உதவியாளரும் பயணித்துக்கொண்டிருந்த தருணத்தில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இந்த விபத்து நடைபெற்றுள்ளது. மீட்பு பணியின் போது விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டும், உழவு இயந்திரமும் மீட்கப்பட்டதுடன் இதில் பயணித்தவர்கள் எத்தனை பேர் எத்தனை பேர் காணாமல் போனார்கள் என்பதை துல்லியமாக கூறமுடியாத நிலை உள்ளதாகவும், குறைந்தது இன்னும் 05 பேராவது வெள்ளத்தில் அள்ளுண்டு சென்றிருக்கலாம் என்று அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலய உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அம்பாறை அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், காரைதீவு மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலாளர்கள், கல்முனை மாநகர ஆணையாளர், கணக்காளர், காரைதீவு பிரதேச சபை செயலாளர், பாதுகாப்பு படை உயரதிகாரிகள், பொலிஸார் எனப்பலரும் புதன்கிழமை (27) காலை இங்கு விஜயம் செய்து துரிதல் கதியில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வநடானர்.. ஸ்தலத்துக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. தாஹீர் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடலினை மேற்கொண்டதுடன் குறித்த மீட்பு பணிகளை துரிதப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

## “களத்துக்கு செல்லுங்கள்”

அதற்காக கீழ் மட்டத்திலிருந்து வலுவான பொறிமுறையொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் வழங்குவது தொடர்பில் அரச அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் புதன்கிழமை(27) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான நிலையங்களில் தங்க வைத்து தேவையான உணவு மற்றும் மலசலகூட வசதி வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

அந்த மக்களுக்கு உதவி வழங்கத் தேவையான அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுதத்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக அதிக ஆபத்துள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் மனநிலை மற்றும் நெருக்கடிகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அவசியம் ஏற்படும் பட்சத்தில் உயர்தர பரீட்சையை மேலும் காலம் தாழ்த்த நடவடிக்கை எடுக்குமாறும் கல்வி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அலோசனை வழங்கினார்.

தற்போது மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றிருக்கும் மீனவர்கள் தொடர்பில் தேடியறிந்து அவர்களை பாதுகாப்பாக கரை சேர்ப்பதற்கு அவசியமான வசதிகளை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தரமான சேவைகளை வழங்கி, பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பிலான தகவல்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் அறிவுறுத்தினார்.

## கிழக்கு பல்கலைக்கழக விடுதிகள் மூடப்பட்டன

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் நிகழ்நிலை மூலம் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழக வளாகம் மற்றும் மாணவர் விடுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மாணவர்கள் வெளியேற்றப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பிரதான வீதிகளில் வெள்ள நீர் மட்டம் உயர்ந்து போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் கடமைக்கு வருவதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியதுடன் பலர் கடமைக்கு சமூகமளிக்கவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு மாணவர்களை வீட்டுகளுக்கு அனுப்பியதுடன் நிகழ்நிலை மூலம் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உறுகாமம் மற்றும் உன்னிச்சைக் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதன் காரணமாக பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்வதில் அரச அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

## மாவீரர் நாள் நினைவேந்தல்

இதன் போது தியாகி திலீபனின் நினைவுத் தூபி முன்பாகவும் அதன் அருகில் அமைக்கப்பட்டுள்ள மாவீர்ர் நினைவாலயம் முன்பாகவும் சிவாஜிலிங்கம் தலைமையிலான நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

## பல பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

இதன்படி, கண்டி மாவட்டத்தில் ஹரிஸ்பத்துவ, மெததும்பர, கங்கபட கோரலய, உடுதும்பர, யட்டிநுவர, பாத ஹேவாஹட, தெல்தோட்டை, பாததும்பர, வில்கமுவ, அம்பகமுவ, அம்பகமுவ கோறளை, இரத்தோட்டை, நாவுல, உள்ளிட்ட பகுதிகளுக்கே இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேச மக்கள் விரைவில் அந்த இடங்களை விட்டு வெளியேறுவது முக்கியம் எனவும், அவர்களை வெளியேற்றுவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம், பொலிஸ், இராணுவம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் அதிகாரிகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## பாலர், முஸ்லிம் பாடசாலைகளுக்கு பூட்டு

இதேவேளை, மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகள் நவம்பர் 29 வரை தற்காலிகமாக மூடப்படும் என மத்திய மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. மத்திய மாகாணத்தில் நிலவும் மோசமான வானிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,

கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் வியாழன்( 28) மற்றும் வெள்ளி( 29) ஆகிய இரண்டு தினங்களும் விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்தணசேகர விசேட அறிவித்தல் விடுத்துள்ளார்.

## எம்.பியின் வாகனம் தடாகத்துக்குள் பாய்ந்தது

விபத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் வாகனத்தில் இருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் அபேசிங்கவை மீண்டும் ஏற்றிச் செல்ல சாரதி வந்தபோதே இவ்வாறு தடாகத்துக்குள் வாகனம் விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## E8 விசாக்கள் தொடர்பான முறைப்பாடுகள் குவிகின்றன

E8 விசா பிரிவின் கீழ் தொழில் வழங்குவதாகக் கூறி பணத்தை ஏமாற்றிய பலர் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவர்கள் தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த தலைவர், E8 விசா பிரிவின் கீழ் தென் கொரியாவில் வேலை வழங்குவதற்கு சட்டரீதியான உடன்படிக்கை இல்லாததால், அந்த வேலைகள் சட்டப்பூர்வமானது அல்ல என்றார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ‘தலைவருக்கு சொல்லுங்கள்’ நிகழ்ச்சித் திட்டத்தில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி ஏமாற்றியவர்கள் குறித்து தகவல் தருமாறும் கோசல விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.

# விமானத்திலேயே பெண்ணின் கைப்பையை திருடிய கணக்காளர்

டி.கே.ஜி.கபில

இங்கிலாந்தின் லண்டனில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு செவ்வாய்க்கிழமை (26) மதியம் வந்து கொண்டிருந்த ஸ் ரீலங்கன் விமானத்தில் அலுவலக உதவியாளரின் கைப்பையை திருடிய கணக்காளர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் கைது செய்துள்ளனர். சிறி ஷ்யாமளி வீரசிங்க 55 வயதான அலுவலக உதவியாளர் ஆவார், அவர் தற்போது இங்கிலாந்தில் வசிக்கிறார், இங்கிலாந்து மற்றும் இலங்கையின் இரட்டை குடியுரிமையுடன் வசிக்கும் அந்த பெண், இலங்கையின் பன்னிப்பிட்டியவில் வசிக்கிறார்.

அவர் செவ்வாய்க்கிழமை (26) மதியம் 01.30 மணியளவில் இங்கிலாந்தின் லண்டனில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-504 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். அவளது கைப்பையில் 14 இலட்சத்து இருபத்து மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் பெறுமதியான 2,700 ஸ்டெர்லிங் பவுண்ட், 02 புதிய வகை கையடக்கத் தொலைபேசிகள் (ஐ போன்) மற்றும் 02 சாம்சங் ரக கைத்தொலைபேசிகள் இருந்தன.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில், இந்த கைப் பை தொலைந்து போனதால், அந்த பெண் இலங்கை விமான போக்குவரத்து அதிகார சபையிடம் புகார் செய்துள்ளார். குறித்த விமானத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதை கண்டுபிடிக்க முடியாத நிலையில், இது தொடர்பில் விமானத்தின் விமானிக்கு அறிவித்ததையடுத்து, கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விசாரணை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய பின்னர், கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளுடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் புலனாய்வு அதிகாரிகள் பயணிகளையும் அவர்களது பயணப் பொதிகளையும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். காணாமல் போன கைப்பையை, இலங்கையின் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் 60 வயதுடைய கணக்காளர் ஒருவரிடமிருந்து மீட்ட அதிகாரிகள் அவரை கைது செய்துள்ளனர். இவர், கனடாவிலும் இலங்கையிலும் இரட்டை குடியுரிமை பெற்றவர் ஆவார்.

அந்த நேரத்தில், அவர் ஏற்கனவே திருடப்பட்ட ஸ்ேரலிங் பவுண்டுகளைப் பயன்படுத்தி விமானத்தில் விற்கப்பட்ட 06 விஸ்கி போத்தல்கள் மற்றும் 03 சுவடா விலவுன் போத்தல்களை வாங்கியுள்ளார், மேலும் மீதமுள்ள ஸ்டெர்லிங் மற்றும் மொபைல் போன்களும் அவரது கைப்பையில் இருந்து மீட்கப்பட்டனர். பின்னர்,




இலங்கை புலனாய்வு அதிகாரிகள், அந்த பயணியை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர், அவர்கள் பயணியை கைது செய்து கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் அ திருடப்பட்ட பணம் மற்றும் பொருட்களுடன் அவரை, நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் புதன்கிழமை (27) ஆஜர்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# சாரதிகளுக்கு அறிவுறுத்தல்

■ பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்டத்தில் கடும் மழை பெய்து வருவதால் அப்பிரதேச வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

குறிப்பாக ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா, ரதெல்ல குறுக்கு வீதியில் வாகனங்களை செலுத்தும் வாகன சாரதிகள் மிக அவதானத்துடன் செலுத்துமாறும், நானுஓயா பங்களாவத்தை பகுதியில் மழையுடன் தொடர்ந்து பனிமூட்டம் காணப்படுவதாகவும், வாகனங்களை செலுத்தும் போது வாகனங்களின் முன் விளக்குகளை ஒளிரவிட்டு வாகனங்களை செலுத்துமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மலைப்பகுதியில் உள்ள வீதிகளில் தொடர்ந்து மரங்கள், பாறைகள், மண் சரிவுகள் ஏற்பட்டு சாலையின் இருபுறங்களும் அனர்த்தங்கள் ஏற்பட்டு வருவதால் மிக அவதானமாக பயணிக்குமாறும் , குறிப்பாக இரவு வேளைகளில் மலைப்பாங்கான வீதிகளில் வாகனங்களை செலுத்தும் போது அதிக கவனத்துடன் இருக்குமாறும், செங்குத்தான மற்றும் மலைப்பாங்கான பிரதேசங்களில் பயணிக்கும் போது வாகனத்தை கட்டுப்படுத்தக்கூடிய வகையில் வாகனங்களை செலுத்துமாறும் பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.



## குளவி கொட்டியதில் 18 பேர் பாதிப்பு

களுத்துறை பிரதேசத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி 18 பேர் புதன்கிழமை (27) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளவி கொட்டுக்கு இலக்காகியவர்களில் மூன்று பெண்கள் உட்பட எட்டு பேர் அகலவத்தை பிம்புர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 10 பேர் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அகலவத்தை பிம்புர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். களுத்துறை பிரதேசத்தில் உள்ள மரம் ஒன்றில் இருந்த குளவி கூடு கலைந்து கொட்டியுள்ளது.

## தாண்டிக்குளம் உடைப்பெடுககும் அபாயம்

■ க. அகரன்

வவுனியா தாண்டிக்குளம் உடைப்பெடுககும் அபாயம் காணப்படுவதால் இக்குளத்தின் கீழ் உள்ள சாந்தசோலை கிராம மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள அடை மழை காரணமாக வவுனியா தாண்டிக்குளம், குளத்திற்கான நீர்வரத்து அதிகரித்தமையால் குளத்தின் அணைக்கட்டின் மேலாக நீர் பாய்கிறது.

மேலும் குளத்தின் அணைக்கட்டின் பல பகுதிகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதுடன், அதிக நீர்வரத்து காரணமாக பல இடங்களில் அடைக்கப்பட்டு பெருமளவில் அரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக குளக்கட்டு உடையும் நிலை ஏற்பட்டுள்ளது.



## பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் பலி

■ க.அகரன்

வவுனியா நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பில் புதன்கிழமை (27) காலை பாம்பு தீண்டியதில், குடும்பஸ்தர் மரணமடைந்துள்ளார்.

பட்டிக்குடியிருப்பில் வசிக்கும் ஒரு பிள்ளையின் தந்தையான 20 வயதுடைய குடும்பஸ்தரையே பாம்பு தீண்டியுள்ளது. பாதிக்கப்பட்டவர், நெடுங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டபோதே மரணமடைந்துள்ளார்.

## அனர்த்த நிலைமை தொடர்பில் ஆராய்வு

■ எஸ்.கீதபொன்கலன், எஸ்.ஆர்.லெம்பேட்

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய அனர்த்த நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கென மாகாண ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஆளுநர் அலுவலகத்தில் புதன்கிழமை (27) நடைபெற்றது.

கடந்த 23ம் திகதி முதல் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையினால் திருகோணமலை, மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் மற்றும் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள்,அதற்கு எடுக்கப்படவேண்டிய அவசர நடவடிக்கைகள் தொடர்பில் அவசர கலந்துரையாடலில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.


இக் கலந்துரையாடலில் மாகாண வீதிப்போக்குவரத்து அமைச்சின் செயலாளர்,திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்,மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்,கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளை அதிகாரி,சுகாதாரத்திணைக்கள மாகாணப் பணிப்பாளர்,மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், வடமாகாணமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் புதன்கிழமை (27) காலை பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுர ஜெயசேகர தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.



இதன் போது வடமாகாண ஆளுநர் என்.வேதநாயகம்,ராணுவ தளபதி மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே ,கடற்படை,பொலிஸ் உயர் அதிகாரிகள்,அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள்,மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு,பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னெடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் மற்றும் அனர்த்தத்தின் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்தம் குறித்து ஆராயப்பட்டதுடன் தொடர்ந்தும் மழை பெய்து கொண்டு இருக்கின்றமையினால் அனுராதபுரம் மற்றும் மல்வத்து ஓயாவில் இருந்தும் கூடுதலான நீர் வந்து கொண்டு இருக்கின்ற நிலையில் மக்களின் பாதுகாப்பை பலப்படுத்தி முன்னாயத்த நடவடிக்கைகளை முன்னெடுக்க பாதுகாப்பு பிரதி அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.



## அழகு படுத்தும் வேலைத்திட்டம்

கற்பிட்டி வீதி பள்ளிவாசல்துறை பிரதான வீதியின் இரு மருங்கிலும் மரங்கள் நாட்டி அழகு படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அழகு படுத்தும் வேலைத்திட்டமானது தேசிய மக்கள் சக்தியின் பள்ளிவாசல்துறை கிளை உறுப்பினர்களால் திங்கட்கிழமை (25) காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எம். நஜுப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கற்பிட்டி பிரதேச சபை செயலாளர் மங்கள ராமநாயக்க, பள்ளிவாசல்துறை கிராம சேவையாளர் ரினூஷா, பள்ளிவாசல்துறை மு.ம.வி. அதிபர் ரிஸ்கான், பள்ளிவாசல்துறை அல் கரம் ஆரம்ப பாடசாலை அதிபர் ஆர். இர்பான், பள்ளிவாசல்துறை நூலகப் பொறுப்பாளர் ஜே.எம். பாரிஸ், தேசிய மக்கள் சக்தியின் கற்பிட்டி பிரதேச நிர்வாக செயலாளர் எம். இபாம், உப தலைவர் அல் ஹாஜ் நயீம் உட்பட ஏனைய உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து சிறப்பித்தனர்.



எம்.யூ.எம்.சனூன்

## உழவு இயந்திரம் மீட்பு...

அம்பாறை மாவட்டத்தில் நிலவிய சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கிய உழவு இயந்திரம், புதன்கிழமை (27) மீட்கப்பட்டது.
வி.ரி.சகாதேவராஜா











## மட்டக்களப்பில்...

■ மட்டக்களப்பு

மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் பெய்து வரும் கன மழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல முக்கிய இடங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு விமான நிலைய சுற்றுப்பகுதி, மத்திய பஸ் தரிப்பிடம், மட்டககளப்பு நகர பொதுச் சந்தை, அரசடிச் சந்தி, கிழக்கு பல்கலைகக்கழக மருத்துவ பீட சுற்றுவட்டப் பகுதி, கல்லடி, காத்தான்குடி - நொச்சிமுனை மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் சித்தாண்டி, வந்தாறுமூலை -கொம்மாதுறை, மட்டக்களப்பு -பதுளை வீதியில் மாவடிஓடை, ஈரலக்குளம், வன்னாத்திஆறு, வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் கன்னங்குடா, கரையாக்கன்தீவு, பண்டாரியாவெளி எனப் பல பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

ஏ.எச்.ஏ. ஹுஸைன்







# யாராக இருந்தாலும் அலட்சியப் போக்கைக் கைவிடுங்கள்

எச்சரிக்கை, எதிர்வு கூறல், சமிக்ஞை உள்ளிட்டவை தொடர்பாக அலட்சியம் செய்யாமல், அதியுச்ச கவனத்தைச் செலுத்தினால், ஏற்படப்போகும் உயிரழிவுகள், பாரிய சொத்திழப்பு, என்பவற்றிலிருந்து ஓரளவுக்கேனும் அரணமைத்துப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

கடந்தகாலச் சிவப்பு எச்சரிக்கையை கவனத்தில் கொள்ளாமையால், இயற்கை அனர்த்தங்கள் உட்பட, பல அழிவுகளை நாடு சந்தித்தது. அதிலிருந்து மீண்டு எழுவதற்கு முன்னரே இயற்கையின் கோரம் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இயற்கை அனர்த்தங்களை தடுக்க முடியாது.

இயற்கை அனர்த்தங்களை ஓரளவுக்குக் கணிப்பிட்டு, எதிர்வு கூறப்படுவதன் ஊடாக, பாரிய அழிவுகளிலிருந்து முன்கூட்டிய பாதுகாப்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். மழை பெய்யப் போவதை எதிர்வு கூற முடியும். ஆனால், பெய்யப்போகின்ற மழையின் அளவை, அச்சொட்டாக எதிர்வு கூறுவது என்பது முடியாத காரியமாகும்.

சூறாவளியின் திசையை மதிப்பிட முடியும். அதன் வேகத்தையும் கணிப்பிட்டு எதிர்வுகூறப்படும். எனினும், சூறாவளி ஊடறுத்துச் செல்லும் திசையில், சிக்கிக்கொள்ளும் கிராமங்கள், நகரங்கள், ஊர்களுக்கு ஏற்படப்போகும் பாதிப்புகளை கணிப்பிட முடியாது.

இயற்கை அனர்த்தங்களான, மழை, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, ஆகியவற்றினால் உயிரிழப்புகளும் சொத்திழப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. எனினும், இந்த உயிரிழப்புகளுக்கு யாரைக் குற்றம் சாடுவது? இயற்கை கோரத்தாண்டவம் ஆடியிருக்கிறது. தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் மண்சரிவு எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டு வந்தன.

என்றாலும் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் இருந்து மக்கள் வெளியேற்றப்படவும் இல்லை, வெளியேறவில்லை. எச்சரிக்கை விடுக்கப்படும் போதெல்லாம் அலட்சியப் போக்குடன் இருப்பதுதான் இதற்கான காரணமாக கொள்ள முடிகிறது. மண்சரிவு ஏற்படபோகும் பிரதேசங்களை அடையாளம் காணும் அதிகாரிகள் அதோடு விட்டுவிடுகிறார்கள். மக்களை வெளியேற்றும் பணிகளை அவர்கள் சரிவர முன்னெடுத்ததாக தெரியவில்லை. அப்படித்தான், அதிகாரிகள் சொல்லிவிட்டாலும் அங்கு இருப்பவர்களும் சொத்துக்கள், சுகங்களை நினைத்து வெளியேறுவது இல்லை.

நடந்தது தாங்க முடியாத வேதனை என்றாலும் உயிர் தப்பியவர்களுக்கும் வாழ்கின்றவர்களுக்கும் ஒரு படிப்பினை என்பதை நாம் மறந்துவிட முடியாது. நடந்தவைகள் நடக்கின்றவைகளும் நடக்கப் போகின்றவைக்கு நல்லதொரு படிப்பினைகளாகின்றன.

இவைகளைப் பொருட்படுத்தாமல் ஏனோ தானோ என்ற போக்குடன் நடந்து கொள்வது நமக்கு நாமே உயிருக்கு உலை வைப்பதற்கு ஒப்பானது. “காலம் முடிந்தால் போகவேண்டியதுதான்” என்று கூறி நினைத்தவாறு நடந்து கொள்வது அலட்சியத்தின் வெளிப்பாடாகும். ஆகவே, யாராக இருந்தாலும் அலட்சியப் போக்கைக் கைவிட்டு விடுங்கள்.

மலையகத்தில் மண்சரிவு மனிதனுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. அதேபோல ஏனைய பிரதேசங்களில் வெள்ளம் கடும் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இயற்கையின் சீற்றத்தால் மக்கள் நிர்க்கதியாகி இருக்கிறார்கள்.

மழையும் வெள்ளமும் நம்மால் கட்டுப்படுத்த முடியாது என்பது உண்மைதான். ஆனால் அவைகளை எதிர்கொள்ளப் பழகுவதுதான் மனிதனின் சாமர்த்தியம்.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

இந்த தேகம் வலுவானது! இதனுள் இருக்கும் உயிர் என்னை விட்டுப் போகாது. நானே பெரியவன். எனக்குள் செல்வம், பலமிக்கப் பதவி எல்லாமே இருந்தபடியே இருக்கும் என எண்ணுவதுடன், தன்னை அழிக்க யார் இருக்கின்றார்கள் எனச் சொல்பவர்கள், இரண்டு நாள்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டால் சோர்ந்து தடுமாறி விடுகின்றார்கள்.

ஆயினும் இந்த நோய் குணமானதும் இந்த மனிதன் மீண்டும் வீரம்பேச ஆரம்பிக்கின்றான். இதுதான் மானுட வாழ்க்கை.

வாழ்க்கையை முறையாக வாழாதுவிட்டால் அவன் பலவீனமான மனிதான் தான்! எவ்வளவு சொத்து, சுகம், கல்வி செல்வாக்குகள் இருந்தாலும் சொந்த வாழ்க்கை அவனுக்கு வெறும் பூஜ்யம். உயிர் என்பதே எப்போது விலகி ஓடிவிடும் எனத் தெரியாமல் வாழும் அறிவிகளே அநேகர். பொய்மைக்கு வெள்ளை அடித்திட முடியாது. பகட்டான வாழ்வில் உண்மையைத் தேட முடியாது. அருவ வாழ்வில் உலகைக் காண முடியாது. பரந்த உலகில் நாங்களும் ஒரு மனிதன். ஆத்ம சமத்துவமே முழுமை தரும்.

- பருத்தியூர் பாலவயிரவநாத்

# தமிழ் தேசிய உணர்வு ‘திசை’ மாறவில்லை

முருகானந்தம் தவம்

பாராளுமன்றத்திற்காக நடந்து முடிந்த தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு தமிழர் தாயகமான வடக்கு மாகாணத்தில் உள்ள 12 ஆசனங்களில் 5 ஆசனங்கள் கிடைத்தமை தொடர்பில் தமிழ் தரப்பினரால் வடக்கு மாகாண தமிழ் வாக்காளர்கள் குறித்து கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதுடன் தமிழ் தேசியக்கட்சிகளிடையில் ஏற்பட்ட பிளவுகள்,முரண்பாடுகள்,குத்து வெட்டுகளினாலேயே தமிழ் தேசிய வாக்குகள் சிங்கள கட்சி ஒன்றுக்கு சென்று விட்டதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது.

சிங்களத் தரப்புக்களை பொறுத்தவரையில் வடக்கு தமிழர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்ததன் மூலம், “தமிழர் தனி நாட்டையோ ,சமஷ்டியையோ ,வடக்கு,கிழக்கு இணைப்பையோ கேட்கவில்லை என்பதனை வடக்கு தமிழர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து வெளிப்படுத்தியுள்ளனர். தமிழர்கள் சிங்கள ஆட்சியை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றவாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள 12 ஆசனங்களில் 5 ஆசனங்களை தமிழர்கள் வழங்கியதன் மூலம் வடக்கு தமிழர் “தமிழ் தேசியத்தை கைவிட்டு விட்டனரா?சிங்களக் கட்சியான தேசிய மக்கள் சக்தி வடக்குத் தமிழர்களின் வாக்குகளை எவ்வாறு பெற்றது என்பது தொடர்பில் வடக்கு மாகாண வாக்களிப்பு புள்ளி விபரங்களுடன் ஆராய்ந்தால் மட்டுமே உண்மை வெளிப்படும் எனவே அது தொடர்பில் பார்ப்போம்

வடக்கு மாகாணத்திலுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 8,99,268. இதில் யாழ்.-கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் 5,93,187 வாக்காளர்களை கொண்டுள்ளது. நடந்து முடிந்த தேர்தலில் 3,58,079 பேர் வாக்களித்த நிலையில் 2,35,108 பேர் வாக்களிக்கவில்லை. அதேநேரம் வாக்களித்த 3,58,079 பேரில் 32,767 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன இதற்கமைய 3,25,312 பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது

அதேபோன்று, வன்னி மாவட்டம் 3,06,081 வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில், நடந்து முடிந்த தேர்தலில் 2,11,140 பேர் வாக்களித்த அதேநேரம் 94,941 பேர் வாக்களிக்கவில்லை. வாக்களித்த 2,11,140 பேரில் 15,254 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 1,95,886பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் 3,30,049 பேர் வாக்களிக்காத நிலையில் 48,021 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய 6 ஆசனங்களைக் கொண்ட யாழ்.-கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 80,830 வாக்குகளைப்பெற்று 3 ஆசனங்களையும் இலங்கை தமிழரசுக்கட்சி 63,327 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 27,986 வாக்குகளைப்பெற்று 1 ஆசனத்தையும் ஊசி சின்னத்தைக் கொண்ட சுயேச்சைக்குழு 27,855 வாக்குகளைப்பெற்று 1 ஆசனத்தையும் கைப்பற்றின. இந்த தேர்தல் தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 3,25,312 வாக்குகளில் 1,99,998 வாக்குகளை இந்த 4 தரப்புக்களும் பெற்றுக்கொள்ள, மிகுதி 1,25,314 வாக்குகளை 19 கட்சிகளும் 20 சுயேட்சைக் குழுக்களும் பெற்றுக்கொண்டன .

அதேபோன்று வன்னி தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 39,894 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 32,232 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் இலங்கை தமிழரசுக்கட்சி 29,711 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் அகில ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி 21,102 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் இலங்கை தொழிலாளர் கட்சி 17,710 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் கைப்பற்றின. இந்த தேர்தல் தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட195,886 வாக்குகளில் 1,40,649 வாக்குகளை இந்த 5 தரப்புக்களும் பெற்றுக்கொள்ள, மிகுதி 52,237 வாக்குகளை 15 கட்சிகளும் 26 சுயேட்சைக் குழுக்களும் பெற்றுக் கொண்டன.

வடக்கு மாகாணத்திலுள்ள மொத்த வாக்காளர்களான 8,99,268 பேரில் 5,69,219 பேர் வாக்களித்த நிலையில், 3,30,049 பேர் வாக்களிக்கவில்லை. வாக்களித்தவர்களிலும் 48,021 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய வடக்கு மாகாணத்தில் செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை 5,21,198.இந்த 5,21,198 வாக்குகளில் தமிழ் தேசியக்கட்சிகளான இலங்கை தமிழரசுக்கட்சி 93,038 வாக்குகளையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 43,615 வாக்குகளையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 35,478 வாக்குகளையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி13,295 வாக்குகளையும் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு 7496 வாக்குகளையும் பெற்றிருந்தன.

அதேபோன்று, ஈ.பி.டி.பி.24,300 வாக்குகளையும் ஜனநாயக தேசிய கூட்டணி 22,370 வாக்குகளையும் பெற்றிருந்தன. இதற்கமைய தமிழ் தலைமைகளைக் கொண்ட இந்த 7 கட்சிகளும் 5,21,198 வாக்குகளில் 2,39,592 வாக்குகளைபெற்றிருந்தன .அதுமட்டுமன்றி ஏனைய சிறுகட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் 95,664 வாக்குகளை பெற்றுக்கொண்டன. ஆக 5,21,198 வாக்குகளில் தமிழ் தேசியக் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் 3,35,286வாக்குகளை கைப்பற்றிக் கொண்டன.மிகுதியாகவுள்ள 1,85,912 வாக்குகளில் சிங்களத் தலைமையைக் கொண்ட தேசிய மக்கள் சக்தி 1,20,724 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சக்தி 47,508 வாக்குகளையும் முஸ்லிம் தலைமையைக் கொண்ட இலங்கை தொழில் கட்சி 17,710 வாக்குகளையும் பெற்றுக்கொண்டன.

கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கில் சிங்களத் தலைமையைக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி 51,447 வாக்குகளைப் பெற்ற நிலையில், இம்முறை 47,508 வாக்குகளையும் 2020 ஆம் ஆண்டு வடக்கில் 42,524 வாக்குகளைப் பெற்ற பொதுஜன பெரமுன இம்முறை 1387 வாக்குகளையும் 2020 ஆம் ஆண்டில் 7838 வாக்குகளைப்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சி இம்முறை 1562 வாக்குகளையும் மட்டுமே பெற்றுள்ள நிலையில் 2020 ஆம் ஆண்டு வடக்கில் 1515 வாக்குகளைப்பெற்ற தேசிய மக்கள் சக்தி இம்முறை 1,20,724 வாக்குகளை பெற்றமைதான் தமிழ்தேசிய உணர்வை கேள்விக்குட்படுத்தியது.

தேசிய மக்கள் சக்தி கடந்த முறையை விடவும் இம்முறை அதிகமாகப் பெற்ற வாக்குகள் தமிழ் தேசியக்கட்சிகளின் வாக்குகள் அல்ல. கடந்த 2020 ஆம் ஆண்டு தேர்தலில் 1,82,883 வாக்குகளைப் பெற்ற இலங்கை தமிழரசுக்கட்சி, இம்முறை 93,038 வாக்குகளைப்பெற்று இழந்த 89,845 வாக்குகள், 2020 ஆம் ஆண்டு தேர்தலில் 63,535 வாக்குகளைப் பெற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இம்முறை 35,478 வாக்குகளைப் பெற்று இழந்த 28, 057வாக்குகள்,2020 ஆம் ஆண்டு தேர்தலில் 44,716 வாக்குகளைப் பெற்ற தமிழ் மக்கள் தேசிய கூட்டணி இம்முறை 13,295 வாக்குகளைப் பெற்று இழந்த 31,421 வாக்குகள் என 1,82,130 வாக்குகளும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணிக்கு 43,615 வாக்குகள், ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்புக்கு 7,496 வாக்குகள், ஜனநாயக தேசியக் கூட்டணிக்கு 22,370 வாக்குகள் ,சுயேச்சைக்குழு 17 க்கு 27,855 வாக்குகள் என 1.01.336 வாக்குகள் சென்ற நிலையில் மிகுதி ஏனைய சிறு தமிழ் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் சென்றுள்ளன.

கடந்தமுறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் போட்டியிட்டு 49,373 வாக்குகளைப்பெற்ற அங்கஜன், இம்முறை 12,427 வாக்குகளைப் பெற்று இழந்த 36,946 வாக்குகள்,கடந்த முறை 57107 வாக்குகளைப்பெற்ற டக்ளஸ் தேவானந்தா இம்முறை 24300 வாக்குகளைப்பெற்று இழந்த 32,807 வாக்குகள், கடந்த முறை 42,524 வாக்குகளைப்பெற்ற பொதுஜன பெரமுன இம்முறை 1387 வாக்குகளைப்பெற்று இழந்த 41,137 வாக்குகள் கடந்த முறை 7838 வாக்குகளைப்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சி இம்முறை 1562 வாக்குகளை பெற்று இழந்த 6276 வாக்குகள் என 1.17166 வாக்குகளுடன் மேலதிகமாக 3000 வரையிலான வாக்குகள் மட்டுமே தேசிய மக்கள் சக்திக்கு சென்றுள்ளன. இந்த வாக்குகள் தமிழ் தேசியத்துடன் தொடர்பபட்ட வாக்குகள் அல்ல.

எனவே தமிழ் தேசிய வாக்குகள் தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையில் பகிரப்பட்டுள்ளநிலையில் ஈ.பி.டி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ,பொதுஜன பெரமுன .ஐ,தே .க.ஆகிய சிங்கள அரசுகளுடன் தொடர்புபட்ட கட்சிகளுக்கு கடந்த முறை வாக்களித்தோரே இம் முறை தமது வாக்குகளை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கியுள்ளனர். அதனால்தான் கடந்த முறை வெற்றி பெற்ற ஈ.பி.டி.பி.யின் டக்ளஸ் தேவானந்தாவோ ,அங்கயன் இராமநாதனோ பொதுஜன பெரமுன கட்சியோ ஐக்கிய தேசிய க்கட்சியோ இம்முறை ஒரு ஆசனத்தை கூடப் பெறவில்லை.இவர்கள் கடந்த முறை பெற்ற 4 ஆசனங்கள்தான் இம்முறை தேசிய மக்கள் சக்திக்கு சென்றுள்ளன.எனவே வடக்கு தமிழ் மக்களின் தமிழ் தேசிய உணர்வு “திசை” மாறவில்லை.

## கடிதங்கள்

### காடுகளினால் சூழப்பட்ட பாடசாலை

முல்லைத்தீவு தேவிபுரம் பாடசாலையின் சூழலில் உள்ள காடுகளை துப்பரவு செய்வதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அரச காணியின் 20 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் அதிக மரஞ்செடி கொடிகள் வளர்ந்திருப்பதன் காரணமாக பாம்புகள் பாடசாலைக்கு வருவதாகவும் பன்றிகளின் நடமாட்டம் கூடுதலாக காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இக்காடுகளில் சமூக விரோத செயற்பாடுகள் இடம் பெறுவதாகவும் பாடசாலைக்கு அருகில் மதுப் போத்தல்கள், நிறைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கும் பெற்றோர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் பாடசாலை சூழலில் காணப்படுகின்ற அரச காணிகள் துப்பரவு செய்யப்படாமல் காடு வளர்ந்து காணப்படுகின்றது.

காணியற்ற குடும்பங்களுக்கு குறித்த காணியினை பிரித்து வழங்குங்கள் அல்லது பிரதேச செயலகத்தின் பொறுப்பில் குறித்த காணிகளை துப்பரவு செய்து மாணவர்கள் ஆசிரியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யுங்கள் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் தேவிபுரம் மக்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையிலும் இதுவரை பாடசாலை சூழலின் காடுகள் துப்பரவு செய்யப்படாததன் காரணமாக மாணவர்கள் ஆசிரியர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாக காணப்படுகின்றது.

நடராசா கிருஸ்ணகுமார்



# பெரும் வரவேற்பை பெற்ற அமரன்



ஞா.மைக்கல் பெவன்,
3ஆம் வருடம், ஊடகக்கற்கைகள் துறை, யாழ்.பல்கலைக்கழகம்




2024ஆம் ஆண்டு வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்ற அமரன் திரைப்படமானது உண்மையான காவியத்தைப் பிரதிபலிக்கிறது. இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமியின்க கதை மற்றும் சிவகார்த்திகேயனின் நடிப்பு படத்தின் முக்கியமான ஆதாரமாக காணப்படுகிறது. இதில் முக்குந்த் என்ற படைத்துறையாளராக சிவகார்த்திகேயனும்  மற்றும் சாய் பல்லவி இந்துவாக நடித்துள்ளார்கள். இந்த கதை, ஒரு தியாகமான காதலின் மூலம் ஒரு படைத்துறையினரின் வாழ்க்கையை அன்போடு பதித்து வருகிறது. கதையின் கதையோட்டத்தை ப்பார்த்தோமானால் முக்குந்த் ஒரு படைத்துறையாளர். தனது காதலி இந்துவின் மலையாள குடும்பத்திற்க ஒப்புதல் பெற முயற்சி செய்கிறார். பாரம்பரிய எதிர்ப்புகள் எதுவுமின்றி காதலர்களின் உறவு நெகிழ்ச்சியூட்டும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. முக்குந்தின் தாயும் இந்துவின் தந்தையும் கதையில் முக்கிய பாத்திரங்களை வகிக்கின்றனர், இது திரைக்கதைக்கு வலிமையையும் உணர்ச்சியையும் சேர்க்கின்றது. அமரன் மற்ற படங்களின் காதல் காட்சிகளை மீறியிருக்கும் விதத்தில், இக்கதையின் அன்பு மிக எளிமையாகவும், மௌனமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளதே அதிகம் ரசிகர்களை கவர்ந்துள்ளது.





சிவகார்த்திகேயனின் பாத்திரமானது முக்குந் என்ற வீரனின்  கடமைக்கான உயிர் தியாகம் செய்யும் உணர்வையும், காதலுக்கும் இடையில் பரிமாணங்களை வழங்கும் விதமாக அமைகிறது. சாய் பல்லவி பாத்திரமானது இந்துவின் அன்பான மற்றும் தியாகமான முகவரியை சாமர்த்தியமாக வெளிப்படுத்துகிறது. அவர்களின் பாசமும் நெருக்கமும் காட்சிகளில் இயல்பாகவே வெளிப்படுகிறது. உதாரணமாக, இருவரும் வாட்ஸாப் வீடியோவில் உறங்கும் ஒரு காட்சி, காதலின் பேரியக்கத்தை மேலும் உணர்த்துகிறது.

இயக்குனர் பெரியசாமி முக்குந்தின் வீரத்தையும் மற்றும் போரில் சாதித்த செயல்களையும் வெளிப்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளார். ஒவ்வொரு சண்டைக் காட்சியும் அவரின் நாட்டுப்பற்றையும் தியாக உணர்வையும் செறிவாக வெளிப்படுத்துகிறது. மேலும், முக்குந்த் தனது நண்பர்களின் உயிரை பாதுகாப்பதற்காக போராடும் காட்சிகள் கூட திரைக்காட்சிகளின் மேன்மையை உயர்த்துகின்றன.

அடுத்து படத்திற்கு மேலும் வலு ஏற்றியதாக பார்த்தோமானால் அமரன் படத்தில் இடம்பெற்ற பாடல்கள்,இசை அமைப்பு என்பவற்றை குறிப்பிடலாம். அமரன் படத்தில் இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ் குமார் இசையில் உருவாக்கப்பட்ட பல பாடல்கள் உள்ளன. முதற்கட்டமாக வெளியான "ஹே மின்னலே" பாடல் மெலோடியான தாளத்துடன் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்த பாடலில் சிவகார்த்திகேயனும் சாய் பல்லவியும் காதலுடன் இயங்கும் காட்சிகள் அமைந்துள்ளன, மற்றும் பாடலின் இசை ரசிகர்களின் இதயத்தை கவர்ந்துள்ளது.

பின் வெளியாகிய "வெண்ணிலவு சாரல்" பாடல் காதல் மற்றும் இரகசியமான தாரகையாக உள்ளது. கபில் கபிலன் மற்றும் ரக்ஷிதா சுரேஷ் பாடிய இந்த பாடலில் யுகபாரதி வரிகளை எழுதியுள்ளார். அடுத்ததாக, "உயிரே" என்ற பாடல் இரு காதலர்களின் உருக்கமான நெருக்கத்தை உணர்ச்சிகரமாக வெளிப்படுத்துகிறது.

இந்த படத்தின் பாடல்கள் எல்லாம் கதைநாயகன் மற்றும் நாயகியின் உணர்வுகளையும் தியாகங்களையும் நெருக்கமான வகையில் வெளிப்படுத்துகின்றன.

அமரன் படத்தில், ஒவ்வொரு காட்சியும் மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. படத்தின் ஒளிப்பதிவு, வண்ண மற்றும் ஒளியின் காட்சிகளை மையமாக வைத்து, பார்வையாளர்களை காட்சியின் உள் உலகில் இழுத்து கொண்டுவருகிறது. ஜி.வி. பிரகாஷ் குமாரின் இசை திரைப்படத்தின் உணர்வுகளைத் தூண்டும் விதமாக அமைந்துள்ளது; சண்டைக் காட்சிகளின் பின்னணி இசையில் அவர் உச்சரிப்புகளைப் பயன்படுத்தி பார்வையாளர்களின் அதிர்வுகளைப் பெருக்குகிறார்.

இந்த படத்தில், சிவகார்த்திகேயன் தனது காதலிக்கும் குடும்பத்திற்கும் இடையில் போராடும் ஒரு வீரனின் பாத்திரத்தை மிக உணர்ச்சிகரமாக பதிவு செய்துள்ளார். அவரது உடல் மொழி, சண்டைக் காட்சிகளில் அவரது திறமையான நடிப்பு மற்றும் மெல்லிய நகைச்சுவை வண்ணங்கள் முக்குந்த் கதாபாத்திரத்தை மிக உணர்ச்சிகரமாக காட்டுகிறது. அவரது நேர்த்தியான ஆற்றல், ஒரு வீரனின் கடமை மற்றும் அன்பின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

சாய் பல்லவி, இந்துவின் பாத்திரத்தில் ஒரு தியாகமான காதலியின் முகவரியை வெளிப்படுத்தியுள்ளார். அவரின் இயல்பான நடிப்பு, நேர்மையான உணர்ச்சிகளை பார்வையாளர்களின் இதயத்தில் பதிக்கிறது. சிறுவயது பெண் குழந்தை ஒன்றின் தாயாக நடிக்கும் சாய் பல்லவி, அவர்களின் குடும்பப் பொறுப்புகளை எடுத்து செல்கின்றார். மலையாள-தமிழ் கலவை மொழியில் அவர் பேசும் பேச்சு, கதைக்கு புதிய உணர்வுகளை வழங்குகிறது.

இந்த திரைப்படத்தில் காதலுக்கும் கடமைக்கும் இடையேயான போராட்டத்தை மையமாகக் கொண்டுள்ளது. சில விமர்சகர்கள் படத்தின் போர்க் காட்சிகளை மேம்படுத்தியது எனப் பாராட்டியபோதும், சிலர் இது போரின் உண்மையான சிக்கல்களை மிக எளிமையாகக் காட்டுகிறது எனவும் தெரிவித்துள்ளனர். காஷ்மீர் பிரச்சினையை சிக்கலற்றதாக சித்தரித்திருப்பது சிறிது சர்ச்சைக்குரியதாக அமைந்துள்ளது. இது நல்லது-கெட்டது என்ற சிக்கலற்ற கோணத்தில் காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன, ஆனால் சிலருக்கு இது உண்மையான சிக்கல்களை மறைத்துள்ளது எனப் பட்டிருக்கலாம்.

அமரன் திரைப்படம், போராட்டம் மற்றும் காதலின் ஆழமான அர்த்தங்களை வெளிப்படுத்தும் அழகிய பிரயாணமாக அமைந்துள்ளது. சிவகார்த்திகேயனின் ஆழமான நடிப்பும் சாய் பல்லவியின் உணர்ச்சிகரமான நடிப்பும் இதில் முக்கிய பங்காக இருந்தாலும், படத்தின் போர்க் காட்சிகள் சற்று சர்ச்சைக்குரியதாக பார்க்கப்படுகின்றன. அமரன், ஒரு உள்நோக்கிய அன்பும் கடமையும் கொண்ட படைப்பாக மாறியுள்ளது, மற்றும் சண்டைக் காட்சிகளும் கதையை உணர்வுப்பூர்வமாக நிறைவு செய்கின்றன.

சில விமர்சகர்கள் இப்படத்தின் போர்க்களத்தில் நடந்த துலக்கமான காட்சிகள் குறித்த அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர். சண்டைக் காட்சிகளில், தோற்கடிக்கும் எதிரிகளை படைப்பது போன்ற பொதுவான காட்சிகள், கதையின் கோணத்தில் சிலருக்கு ஏமாற்றமாக இருக்கலாம். காஷ்மீர் பிரச்சினையை வெறும் நல்லது-கெட்டது என மீள்கலக்காமல் சித்தரித்துள்ளது, இது சிலருக்கு ஏமாற்றமாக இருக்கலாம் என கூறப்படுகிறது.

அமரன் திரைப்படம் உணர்ச்சிகளின் கண்ணியாகும். நடிப்பிலும் காட்சிகளிலும் உணர்ச்சிகளை புரட்டும் விதமாக அமைந்துள்ள இது, ஒருவரின் கடமையிலும் அன்பிலும் இடையேயான போராட்டத்தை நன்றாக சித்தரிக்கிறது.



# காலச்சக்கரம்



றொசில்டா அன்டன்

பச்சை பசேல் என்ற புற்தரையில் காலை கதிரவனின் ஒளிப்பட்டு இரவு பெய்த பனித்துளிகள் மின்னிக்கொண்டிருந்தன. அங்காங்கே ஆடுகளும் ,மாடுகளும் மேயந்துக்கொண்டிருந்தது. இந்த அழகிய கிராமத்தில் சுந்தரம்,சங்கரன் என்கின்ற நண்பர்கள்.

இவர்கள் மற்றவர்களின் பார்வையில் நட்பை பாராட்டினாலும் சுந்தரம் எப்பவும் சுயநலமாய் மட்டுமே சிந்திப்பவர். சங்கரன் தான் மட்டுமல்ல மற்றவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பவர். "என்ன சங்கரன் இந்த பக்கம் அலுவலாக வந்தனீயா"

"ஓம் மகள் தையல் பழகி முடித்து விட்டாள். தையல் மெசின் வாங்கனும் என்னிடம் அவ்வளவு பணம் எங்க இருக்கு அது தான் சமூக அமைப்பு ஒன்றிட்ட உதவி கேட்டன், நாங்க செய்றம் கடிதம் ஒன்றை எழுதி கிராம சேவையாளரிட்ட கையெழுத்து வாங்கி கொண்டு வாங்க என்டினம் அது தான் வந்தனன்." சுந்தரம் அந்த ஊரின்  கிராம உத்தியோகஸ்தர். நண்பன் சங்கரன் இப்படி கூறியதும் 'கொஞ்ச நாளைக்கு இழுத்தடிப்பம் சைனுக்காக அலையட்டும் அப்ப தான் நம்மளை பெரியவன் என்று நினைத்து இன்னும் மரியாதை தருவான். என்று மனதிற்குள் கர்வமாக நினைத்துக் கொண்டான். "கொண்டு வா கடிதத்தை பார்ப்பம் சங்கரா" என்று சுந்தரம் கேட்க கடிதத்தை கொடுத்தான் சங்கரன். கடிதத்தை வாசித்து விட்டு "சங்கரா இந்த கடிதம் இப்படி எழுதுவது பிழை நாளை கடிதத்தை சரியாக எழுதி விட்டு வா சைன் வைத்து தாறேன்". என்றார்.

ஏமாற்றத்துடன் வீட்டை நோக்கி நடந்தார். தன் ஏழ்மையை எண்ணி வருந்தினார். மர பலகை அறுக்கும் வேலை செய்வதால் மூச்சு எடுப்பதும் சரியான சிரமம். இடைக்கிடையே வேலைகளுக்கும் போவதும் குறைவு. ஆஸ்பத்தரிலயே தன் நேரத்தை கூடுதலாக செலவழிப்பதால் அவ்வப் போது  தொழிலிலும் கவனம் செலுத்த முடிவதில்லை. மனைவி வீட்டிலே யாராவது சிற்றுண்டிகள் ஓடர் கொடுத்தால்  செய்து கொடுப்பது வழக்கம். தாய் சிக்கனமாக செலவுகளை கொண்டு செல்வதால் வாழ்க்கை கடன் படாமல் சென்று கொண்டிருக்கின்றது. அவரின் அன்பு மகள் தருணியும்,

சுந்தரத்தின் மகன் மயுரனும் ஒன்றாகவே படித்தனர். அவன் பல்கலைக்கழகம் சென்று விட்டான். ஆனால் மகள் தருணி உயர்தரம் வரை கற்று விட்டு தொழில் பயிற்சிகளாக தையல்,கேக்,அலங்கார வேலைப்பாடு என தன்னால் முடிந்தளவிற்கு சுயமாக உழைக்கும் அத்தனை தொழில்களையும் இலவசமாக படிப்பிற்கும் இடங்களில் கற்று தேர்ந்தாள். ஒவ்வொரு நாளும் கிராம சேவையாளரின் கடிதம் பெற அலைந்தார். சங்கரன். இரண்டு கிழமைக்கு பிறகு "ஜீயஸ் நிற்கிறாரா அம்மா"  கிராம சேவையாளர் அலுவலகத்தின் வெளியே நின்றுக் கொண்டிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சுபா அம்மாவிடம் தருணி கேட்டாள். "ஆம் உள்ளே இருக்கிறார் போய் சந்தியுங்கள்"

ஜீயஸ்ட அலுவலக அறைக்குள் தருணி விருட் என்று நுழைந்தாள். " ஐயா அப்பாவின் நல்ல நண்பர் நீங்கள். வசதி இல்லாமையால் தான் அப்பா நெடுகிலும் உங்களிடம் இந்த கடிதத்தை கொண்டு வந்து அலைகின்றார். சிறிதளவு கூட இரக்கம் இல்லையா? பாவம் அப்பா ஒரு கிலோமீட்டர் தூரம் நடந்தே வருவதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் ஒரு சைன் வைத்துக் கொடுக்க இந்தப்பாடு படுறிங்களே ஐயா நியாயமா" என்று கேட்க "சரி சரி கொண்டு வா கடிதத்தை நான் சரியான பிசி அதுதான் அப்பாவை கவனிக்க முடியல"என்றார். சைன் வைத்ததும் நன்றி கூறி விட்டு சிறிதும் தாமதிக்காமல் சென்று விட்டாள். தையல் இயந்திரம் பெற்றுத் தருபவர்களிடம் சென்று கடிதத்தை கையளித்தாள். இந்த கடிதம் தாமதமானதிற்கான காரணத்தையும் கூறினாள். அந்த அமைப்பு தருணியின் முயற்சியை பாராட்டி அவளுக்கு தையல் இயந்திரத்தை பெற்றுக்கொடுத்தது. அவள் அழகாக தைக்கின்றாள். குறைந்த பணமே அறவிடுகிறாள் என்று அந்த கிராமமே அவளிடம் ஆடைகளை தைக்க தொடங்கினார்கள். வெளிப்பிரதேசங்களில் இருந்தும் தையல் ஓடர் வர தொடங்கியது. அவளுடைய முயற்சியால் ஒரு தையல் இயந்திரம் பத்து தையல் இயந்திரமாய் மாறியது . பலருக்கு வேலை வாய்ப்பையும் வழங்கினாள். தையல் பயிற்சிகளும் அளித்தாள். பலருக்கு உதவிகளும் செய்ய தொடங்கினாள். ஏழு வருடத்தில் அபார வளர்ச்சி. அரசாங்க தொழிலுக்காக காத்திருப்பதை விட சுய தொழிலில் பல இலட்சங்களை உழைக்கலாம். ஜீயஸ் சுந்தரம் பென்சன் ஆகிவிட்டார். மகன் மயூரன் பல்கலைக்கழகம் முடித்தும் இரண்டு வருடங்களுக்கு மேலாக  வீட்டில் சும்மா தான் இருந்தான். அந்த ஊரில் ஏதும் திறப்பு விழா என்றால் தருணியை அழைத்து ,முன்னுரிமை கொடுப்பார்கள் அந்த ஊர்காரர்கள். சுந்தரத்திற்கு சங்கரனை மட்டம் தட்ட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியே இருந்தது." வங்கியில் பணம் எடுப்பதற்காக தந்தையுடன் தருணி ஆட்டோவில் வந்திறங்கினாள். இதை கண்ட சுந்தரம் "என்ன பிள்ளை தருணி ஓடாய் தேய்ந்து விட்டாய் இப்படி ஒரே ஓட்டம் தான் போல அப்பா அரசாங்க வேலையில் இருந்திருந்தால் என்னை போல காலுக்கு மேல கால் போட்டு இருந்த இடத்தில சாப்பிடலாம். நீ ஒழுங்காக படித்திருந்தால் என்ட மகன் மாதிரி பட்டதாரி ஆகியிருக்கலாம்". என்றார். அதற்கு தருணி " ஐயா ஏழு வருட கடின உழைப்பு தான் என் அப்பாவை ராஜா மாதிரி வைச்சிருக்கன். நடந்ததே திரிந்தவர் இன்று சொந்த ஆட்டோவில போறார்.

சிறந்ததை தேடுபவர்கள் தேடிக் கொண்டு தான் இருக்கிறார்கள் ....

கிடைத்ததை சிறந்தது ஆக்குபவர்கள்

சந்தோஷமாக வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.....அந்த வகையில் நாங்க சந்தோஷமாக தான் வாழ்கின்றோம் "என்று கோவமாக தருணி கூறி விட்டு சற்றும் தாமதிக்காமல் அப்பாவுடன் ஆட்டோவில் ஏறி புறப்பட்டாள். சில நாட்களின் பின்

ஒரு நாள் கிராம சேவையாளர் அலுவலகத்தில் சுந்தரம் ,சங்கரனையும், மகள் தருணியையும் கண்டார்."என்ன சுந்தரம் நீங்க இந்த அலுவலகத்தில்" "இல்லை சங்கரன் பென்சன் விடயமாக ஐந்து நாட்களாய் அலையிறன் ஒரு சைனுக்காக இத்தனை அலைச்சல். என்னால முடியல வரிசையில் நிற்பது பிறகு அந்த ஆவணம் ,இல்லை இந்த ஆவணம் இல்லை, கடிதம் பிழை என்று அலைய வைக்கினம்" என்று அலுத்துக் கொண்டார். அப்போது கிராம சேவையாளரின் அறைக்குள்ளிருந்து ஜீயஸ் வெளியே வந்தார். தருணியை கண்டவர் கையெடுத்து கும்பிட்டு "என்ன மிஸ் தருணி இவ்வளவு தூரம் போனிலே விசயத்தை சொல்லியிருக்கலாமே "  இல்ல ஜீயஸ் அம்மா நாளைக்கு இருநூறு  பிள்ளைகளுக்கு பாடசாலை பேக்,கொப்பிகள் கொடுக்க இருக்கிறம். நீங்களும் அந்த நிகழ்விற்கு வரனும்."

"கட்டாயம் வருவன் இதை போனிலே சொல்லியிருக்கலாமே." என்றாள்.

"நேரில் வருவது தான் சிறந்தது ஜீயஸ் அம்மா சரி நான் போய் வருகின்றேன்" என்று கூறி விட்டு ஜீயஸ் அம்மாவிடமிருந்தும், சுந்தரத்திடமிருந்தும்  விடைப்பெற்றனர். சுந்தரத்தின் ஆவணங்களை சரி பார்த்த ஜீயஸ் அம்மா "ஐயா இந்த கடிதத்தில் சிறிய பிழையிருக்கின்றது . நாளை வரும் போது இதை திருத்தி கொண்டு வாங்க."என்றார். சங்கரனும்,தருணியும் அலுவலகத்திற்கு வெளியே நின்று இதை அவதானித்தவர்கள் மீண்டும் உள்ளே வந்து ஜீயஸ் அம்மாவிடம் "இவர்ட பென்சன் விசயமாக பல நாட்களாய் அலைகிறார் பாலே நீங்க தான் கொஞ்சம் இதை பார்த்து செய்து கொடுங்க"என்றாள்.

"உங்களுக்கு தெரிந்தவரா இவர் ஜீயஸாக இருந்துள்ளார். நான் கொஞ்சம் பிசியாக இருந்திட்டன். அதனால இவரை கவனிக்க முடியல இன்றே எல்லாம் சரி பார்த்து கொடுக்கிறேன்".என்றார்.

வெளியே வந்த சுந்தரம் தருணியின் கையை பிடித்து"மன்னிச்சிடும்மா அரசாங்க வேலையில் இருக்க மட்டும் தான் இந்த எல்லா சலுகைகளும். பென்சன் என்ற ஒன்றுக்குள் வந்து விட்டோம் என்றால் யாருமே கணக்கு எடுக்க மாட்டார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன். உன்னுடைய முயற்சியால் இன்று பலருக்கு வேலை வாய்ப்புகளையும் கொடுத்து, பல பிள்ளைகளுக்கு நீ உதவி செய்வதனால் உன்னை ஊரே போற்றும் அளவிற்கு வளர்ந்துள்ளாய். படிப்பும்,பட்டமும்,பதவியும் நமக்கு வாழ்வளிக்கும்,பெருமை சேர்க்கும்  என்பதை விட சுய உழைப்பு  தெரிந்திருந்தால் நிம்மதியாக வாழலாம் என்பதை உன் மூலமாக தெரிந்து கொண்டேன் யாருக்கும் அடிமையாக வாழ வேண்டும் என்றில்லை. நீ வயதில் சிறியவளாய் இருந்தும் தலைக்கணம் இல்லாமல் பெரியவர்களை மதிக்கும் இந்த பண்பு எம்மிடம் இல்லாமல் போயிற்றே" என்று மனம் வருந்தினார். காலம் எப்படி ஒரு மனிதனின் வாழ்வை மாற்றுகின்றது.



அக்கரைப்பற்று





மட்டக்களப்பு




# இயற்கையின் கோரத் தாண்டவம்


நாடளாவிய ரீதியில், கடந்த சில நாட்களாக நிலவும், சீரற்ற காலநிலை காரணமாக, பல்வேறு அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. (தமிழ்மிரர் நிருபர்கள்)





காரைத்தீவு





ஹட்டன்





ஒட்டமாவடி





பூண்டுலோயா





நோட்டன்



நீர்கொழும்பு









நுவரெலியா

இந்தியா

அதானி விவகாரத்தால்

# இரு அவைகளிலும் அமளி துமளி



கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு அதானி விவகாரத்தை விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டன.

தொடர் அமளியால் நாள் முழுவதும் மாநிலங்களவை ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்றத்தின் இரு அவைகளும், புதன்கிழமை (27) காலை 11 மணிக்கு கூடின. கூடியதும், கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு அதானி விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

கேள்வி நேரம் முக்கியமானது என்றும், உறுப்பினர்களின் கோரிக்கை ஏற்கப்படும் என்றும் சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்தார். உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு கோரிக்கை விடுத்தார். எனினும், அவையில் தொடர்ந்து கூச்சல் குழப்பம் நிலவியதை அடுத்து அவையை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைத்தார்.

இதே விவகாரம் மாநிலங்களவையிலும் எழுப்பப்பட்டது. அப்போது பேசிய அவைத் தலைவர் ஜக்தீப் தன்கர், “அதானி விவகாரம், டெல்லியில் நடந்த குற்றங்கள், மணிப்பூர் வன்முறை, சம்பால் வன்முறை என 18 பிரச்சினைகள் தொடர்பாக ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும், இந்த அவைக்கு என்று பாரம்பரியம் உள்ளது. எனவே, அந்த பாரம்பரியப்படி அவை நடத்தப்படும்” என்றார்.

இதை ஏற்க மறுத்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து முதலில் 11.30 மணி வரை அவையை அவைத் தலைவர் ஒத்திவைத்தார். மீண்டும் அவை கூடியதும், மீண்டும் அமளி ஏற்பட்டதைத் தொடர்ந்து அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

பழனி

பழனி வேலனுக்கு


## வேல் கொடுத்த ரஷ்யர்கள்

பழனி முருகன் கோவிலுக்கு, 6 அடி உயரம் கொண்ட வேலை, ரஷ்யா நாட்டைச் சேர்ந்தவர்கள் காணிக்கையாக வழங்கியுள்ளனர்.

ரஷ்யாவை சேர்ந்த பெண்கள் உட்பட 5 பக்தர்கள் கடந்த 10 நாட்களுக்கு முன்பு தமிழகம் வந்தனர். அவர்கள் தமிழகத்தில் உள்ள முக்கிய கோவில்கள் மற்றும் நவக்கிரக கோவில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

அந்த வகையில் ரஷ்ய பக்தர்கள், செவ்வாய்க்கிழமை (26) காலை பழனி முருகன் கோவிலுக்கு வந்தனர். அவர்கள் 6 அடி உயரம், 12 கிலோ எடை கொண்ட பித்தளை வேலை கொண்டு வந்திருந்தனர்.

பின்னர் அவர்கள் படிப்பாதை வழியாக மலைக்கோவிலுக்கு சென்று, அங்கு முருகப்பெருமானை தரிசனம் செய்தனர். பின்னர் மலைக்கோவிலில் உள்ள அலுவலகத்தில் தாங்கள் கொண்டு வந்த வேலை காணிக்கையாக செலுத்தினர்.



ஆந்திரா

மகன் கொலை;

## 26 ஆண்டுகளுக்கு பின்னர் தந்தை கைது

சொந்த மகனை, 26 ஆண்டுகளுக்கு முன் கொலை செய்துவிட்டு, தப்பி தலைமறைவான தந்தையை, திருமண பத்திரிக்கை மூலம் ஆந்திர பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆந்திரா மாநிலம், அனந்தபூர் மாவட்டம், குடிபண்டா மண்டலம், திண்ணஹட்டிகி கிராமத்தை சேர்ந்தவர் திப்பேசாமி. இவர் தனது மனைவி மீது சந்தேகம் கொண்டிருந்தார். இவர்களுக்கு 6 மாதத்தில் குழந்தை ஒன்றும் இருந்தது.

இந்நிலையில், கடந்த 1998ஆம் ஆண்டு மனைவி மற்றும் மகனுடன் தசரா பூஜையில் பங்கேற்க கோவிலுக்கு சென்றார். அப்போது மனைவி கோயிலை பிரதட்சனம் செய்து கொண்டிருந்தபோது, மனைவி மீது இருந்த சந்தேகத்தால், தனது 6 மாத குழந்தையை தூக்கி சென்று, ஒரு புதரில் கொலை செய்து, அங்கேயே சடலத்தை குழி தோண்டி புதைத்துவிட்டு, திப்பேசாமி தலைமறைவானார்.

பின்னர் குழந்தையையும், கணவரையும் காணவில்லை என அவரது மனைவி, பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தார். விசாரணையில், திப்பேசாமி தனது குழந்தையை கொலை செய்து விட்டு தப்பியோடிய விவரம் தெரியவந்தது. அப்போது முதல் தலைமறைவு குற்றவாளியாக திப்பேசாமி இருந்தார்.

அவர் கர்நாடகா தப்பி சென்று தனது பெயரையும் கிருஷ்ணா கவுட் என மாற்றிக்கொண்டார்.

அமெரிக்கா

லெபனான்–இஸ்ரேல் எல்லை போர்:

## முடிவுக்கு வருகிறது

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அமெரிக்க முன்மொழிவை இஸ்ரேலும், ஹிஸ்புல்லாவும் ஏற்றுக்கொண்டதாக, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் குறிப்பிட்டுளலளதாவது,

“இன்று, மத்திய கிழக்கில் இருந்து எனக்கு ஒரு நல்ல செய்தி வந்துள்ளது. நான் லெபனான் மற்றும் இஸ்ரேல் பிரதமர்களுடன் பேசினேன். மேலும் இந்த செய்தியை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

“இஸ்ரேலுக்கும் ஹெஸ்பொல்லாவுக்கும் இடையிலான பேரழிவுகரமான மோதலை முடிவுக்கு கொண்டுவருவதற்கான அமெரிக்காவின் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்” என்று, அதில் ஜோ பைடன் பதிவிட்டுள்ளார்.

தனது மற்றொரு பதிவில், “இன்று எட்டப்பட்ட ஒப்பந்தத்தின்படி, லெபனான்-இஸ்ரேல் எல்லையில் நடக்கும் போர் வியாழக்கிழமை (இன்று) முடிவுக்கு வருகிறது. இஸ்ரேல் மற்றும் லெபனான் மக்களுக்கு நீடித்த பாதுகாப்பை போர்க்களத்தில் மட்டும் அடைய முடியாது. அதனால்தான் போர் நிறுத்தத்தை உருவாக்க இஸ்ரேல் மற்றும் லெபனான் அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்றுமாறு எனது குழுவை நான் அறிவுறுத்தினேன்” என்று, அதில் ஜோ பைடன் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக லெபனானின் ஹிஸ்புல்லா படையினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நடைபெற்றுவரும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்காவுக்கான இஸ்ரேல் தூதுவர் மைக் ஹெசாக் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேல்

போர் நிறுத்த ஒப்பந்த இணக்கத்துக்கிடையே

### நெதன்யாகுவின் எச்சரிக்கை

லெபனானுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே ஓராண்டுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கு பதிலடியாக லெபனான் மீது இஸ்ரேல், வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவு அளித்து வரும் ஈரானும், இஸ்ரேல் மீது கோபம் அடைந்துள்ளது.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய பும்ரா



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு ஜஸ்பிரிட் பும்ரா முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை பும்ரா அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜஸ்பிரிட் பும்ரா, 2. ககிஸோ றபாடா, 3. ஜொஷ் ஹேசில்வூட், 4. இரவிச்சந்திரன் அஷ்வின், 5. பிரபாத் ஜெயசூரிய, 6. பற் கமின்ஸ், 7. இரவீந்திர ஜடேஜா, 8. நேதன் லையன், 9. நொமன் அலி, 10. மற் ஹென்றி.

குறித்த போட்டியில் 161 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் யஷஸ்வி ஜைஸ்வால், துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை இப்போட்டியில் 100 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் ட்ரெவிஸ் ஹெட், 13ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி பத்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. யஷஸ்வி ஜைஸ்வால், 3. கேன் வில்லியம்சன், 4. ஹரி ப்றூக், 5. டரைல் மிற்செல், 6. றிஷப் பண்ட், 7. ஸ்டீவன் ஸ்மித், 8. சௌட் ஷகீல், 9. கமிந்து மெண்டிஸ், 10. ட்ரெவிஸ் ஹெட்.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 68 ஓட்டங்களைப் பெற்றதுடன், 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பங்களாதேஷின் மெஹிடி ஹஸன் மிராஸ் சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஆறாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், மெஹிடி ஹஸன் மிராஸ், 5. ஜேஸன் ஹோல்டர்.

சம்பியன்ஸ் லீக்:

## சமநிலையில் சிற்றி பெய்னூர்ட் போட்டி

### பரிஸ் ஸா ஜேர்மனை வென்ற பயேர்ண் மியூனிச்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் புதன்கிழமை (27) நடைபெற்ற நெதர்லாந்துக் கழகமான பெய்னூர்ட்டுடனான போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியது.

சிற்றி சார்பாக எர்லிங் ஹலான்ட் இரண்டு கோல்களையும், இல்கி குன்டோகன் ஒரு கோலையும் பெற்றனர். பெய்னூர்ட் சார்பாக, அனிஸ் ஹட்ஜி-மூஸா, சன்டியாகோ ஜிமெனெஸ், டேவிட் ஹங்கோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற பிரெஞ்சுக் கழகமான பரிஸ் ஸா ஜேர்மைனுனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியக் கழகமான பயேர்ண் மியூனிச் வென்றது. மியூனிச் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிம் மின்-ஜே பெற்றிருந்தார்.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற இன்னொரு ஜேர்மனியக் கழகமான ஆர்.பி லெய்ப்ஸிக்குடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் வென்றது.

இரண்டாவது போட்டியில்

## சிம்பாப்வேயை வீழ்த்திய பாகிஸ்தான்



சிம்பாப்வேக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், புலவாயோவில் செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

சிம்பாப்வே: 145/10 (32.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: டியோன் மையர்ஸ் 33 (30), ஷோன் வில்லியம்ஸ் 31 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: அப்ரார் அஹ்மட் 4/33, சல்மான் அக்ஹா 3/26, பைஸல் அக்ரம் 1/19, சைம் அயூப் 1/16)

பாகிஸ்தான்: 148/0 (18.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: சைம் அயூப் ஆ.இ 113 (62), அப்துலாஹ் ஷஃபிக் ஆ.இ 32 (48) ஓட்டங்கள்)


போட்டியின் நாயகன்: சைம் அயூப்

இத்தொடரின் முதலாவது போட்டியை சிம்பாப்வே வென்ற நிலையில், இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் தீர்மானமிக்கதுமான போட்டியானது இன்று பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதலாவது டெஸ்டில்

## பங்களாதேஷை வென்ற மேற்கிந்தியத் தீவுகள்

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டை மேற்கிந்தியத் தீவுகள் வென்றது. இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், அன்டிகுவாவில் வெள்ளிக்கிழமை (22) ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 7 விக்கெட்டுகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பங்களாதேஷ் அல்ஸாரி ஜோசப்பிடம் 2 விக்கெட்டுகளை இழந்ததுடன் ஷொரிஃபுல் இஸ்லாம் தொடர்ந்து துடுப்பெடுத்தாட முடியாமல் போனநிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 132 ஓட்டங்களையே பெற்று 201 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 28, நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.